# மஞ்சள் பூக்கள்

ஆ. ஈஸ்வரன்

முதல் பதிப்பு : 2008
© ஆசிரியருக்கே

மஞ்சள் பூக்கள்
மரபு மற்றும் புதுக்கவிதைத் தொகுப்பு
ஆ. ஈஸ்வரன்

9.09.2007

இதழ்
2/171,மோலாண்டிப்பட்டி,
மாட்டுக்காரனூர் அஞ்சல்,
ஓமலூர் தாலுக்கா, சேலம்–636 011.

விலை:ரூ. 50/–

ஒளி அச்சு
கலை ஆப்செட், குருசாமிபாளையம்.

அச்சிட்டோர்
வேலவன் ஆப்செட், ஐந்து ரோடு, சேலம்–4.

# என்னுரை

இது கவிதை என்றால்

எனது கவிதைகளுக்கு வலியே வழியும், சுழியும் போட்டுக்கொடுத்தது வலிகளை கவிதையாய் மொழிபெயர்த்து அச்சில் காணும் போதுதான் தெரிகிறது வலி நல்லது வலிகள் நல்லவை. வலிகள் வழிகளுக்கு கூட வழிவகுக்கும் என்பதை அப்போது தான் உணர முடிந்தது.

மெல்ல மெல்ல எனது தடித்த வார்த்தைகள் தோலுரிந்து இன்று இளகிய கவிதையாய் ஆகியிருப்பது எனக்கு பெருமையே

சில கவனிப்புகளும் என் கவிதைகளில் கருவாகி இருப்பதை படிக்கும் போது நீங்கள் உணரலாம்.

சலித்த தூறலில், சன்னமான இரவுகளில், நட்சத்திரம் நடுங்கும் நடு நிசியில், வெப்பம் கொப்பளிக்கும் வெட்ட வெளியில், மதிய நேர அரசு பேருந்தின் காலியான கடைசி இருக்கையில், சில ஏமாற்றங்களில், சில எதிர்பார்ப்புகளில், சில இன்பங்களில் இனம் புரியாத புன்னகையில் இன்னும் பலவற்றில் என்கவிதை கருவாயிருக்கலாம் என்று என்னால் ஓரளவிற்கு யூகிக்க முடிகிறது.

ஒரு கவிஞன் ஆசிரியன் அல்ல. இது பூ, இது வண்டு அவ்வளவு மட்டுமே சொல்ல முடியும் அதற்கடுத்து வாசகன் பொருப்பு. ஏதோ புத்தகத்தில் படித்த ஞாபகம் “கவிஞன் எங்கு முடிக்கிறானோ வாசகன் அங்கிருந்து தொடங்க வேண்டும்” இதில் எனக்கும் சம்மதம்.

விடலை பருவத்தில் காதலா, காமமா என்று இனம் புரியாத ஓர் உணர்ச்சி எட்டிப்பார்க்கும், எல்லோரும் அறிந்ததே அதுவும் என் கவிதைகளில் இழையோடி இருப்பதை இதை படிக்கும் போது உணரலாம்.

எல்லோரிடமும் வார்த்தைகள் வந்து விழுகின்றன. ஆனால் அதை வரிசைப்படுத்த தெரிந்தவனைத்தான் உலகம் கவிஞன் என்று கைகொடுக்கிறது. கை நீட்டிக் கொண்டே காத்துக் கிடக்கிறேன்.

எனது பருவத்து உணர்ச்சி நீருக்கு கவிதையே வடிகால் அமைத்துக் கொடுத்தது. பெண்களின் பாதிப்பு இல்லாமல் எந்தக் கவிஞனும் தன்நிலை விட்டு எம்பியிருக்க முடியாது என்பது என் எண்ணம்.

பெண்கள் சதைப் பூக்கள் வன்மையாய் பறிக்க எண்ணுபவர்களின் கைகளைக் கிழித்துவிடுகிறது. பாதுகாக்கப்பட வேண்டும் என்று காத்துக் கொண்டிருப்பவர்கள் காலம் தோறும் காத்தேக் கிடக்கின்றனர் இதற்காக முதல் தகுதி ரசிப்பு ரசிப்பு என்னில் நலம்.

ரசிப்பு வேறு, வியப்பு வேறு ரசிப்பு நம்மை நல்லது செய்யும், வியப்பு நம்மை வீழ்த்தினாலும் வியப்பில்லை.

தமிழில் கொட்டி வைக்கப்பட்ட வார்த்தை கூட்டிலிருந்து வெளிவந்த இந்த பிஞ்சு மொழிகளுக்கு நான் கவிதை என்று பெயர் வைத்திருக்கிறேன். ஏனெனில் உண்மையில் இவைகள் அனைத்தும் கவிதைகள்.

விபத்தின் அவசரத்தில் சொன்னாலும், தியானத்தின் நிதானத்தில் சொன்னாலும் கவிதைகள் இவை கவிதைகளே.

புத்தக அறிவையும், புலனறிவையும் புயல்கள் தாக்காத என் முளை தேசத்தின் முக்கியமான பகுதியில் சிறுக சிறுக சேமிக்கிறேன் ஒரு சிட்டுக்குருவியைப் போல. நான் வளர்வேன் இதை ஆணவத்தின் தடித்த கம்பிகள் வழிச்சொல்லவில்லை நம்பிக்கை எனும் மெல்லிய இழை வழியாக சொல்கிறேன்.

தலையணையை நேராக நிறுத்தி உட்கார்ந்து கொண்டே படுத்துக் கொண்டு எனது கவிதைகளை படித்து நல்லவற்றிற்கு “ச்சே” என்று உச்சுக் கொட்டும் வார்த்தைதான் நிங்கள் எனக்கு கொடுக்கும் விருதுகள்.

விமர்சன உளி படாமல் எந் கலையும், சிலையாக முடியாது. விமர்சனம் நல்லது வலியைப் போலவே ஓரளவிற்குள் அடங்கி விடுமெனில்..

உங்கள் அன்பன்
ஆ.ஈஸ்வரன்

●

எண்ணத்தில் நீயிருந்தாய் அறியாது,
எங்கெங்கோ தேடி யலைந்தேன்.
கண்ணினை மூடிக் கொண்டு,
காட்சிகளை யெல்லாம் குருடென்றேன்.
புண்ணிலும் நியிருக்க அஃது.,
புரியாமல் தான்தவித் திருந்தேன்.
வெண்ணொளி பீச்சிட்டு மனஇருளை
விலக்கிட்டாய் இறையே! தெளிந்தேன்.

## வேறு

செந்தமிழே! பெண்ணுன்னை லேசாய் உரசினேன்
தந்த சுகமென் தலைக்கேற – சந்தம்பல்
சிந்தும் கவிகள் பலஉனக்கு, சிந்தனையின்
விந்தூட்டி ஈனுவேன் நான்.

●

## மஞ்சள் பூக்கள்

நீங்கள்
ஆயிரம் பூக்களை,
ஆயிரம் வண்ணங்களில்
பார்த்திருக்கலாம்.

○

வெள்ளைப்பூக்களால் – நீங்கள்
வெளுக்கப் பட்டிருக்கலாம்;
சிவப்பு ரோஜாக்களால் – நீங்கள்
சிந்தை இழந்திருக்கலாம்.
ஊதா பூக்களின்
ஒட்டைகளில்
உயிரை ஒழுகவிட்டிருக்கலாம்.
இன்னும்
எத்தனையோ
பெயர் தெரியாத நிறப்பூக்களை
பார்க்கும் போதெல்லாம்
நீங்கள்
நீங்களாகவே நிரம்பியிருக்கலாம்.

○

மஞ்சள் பூக்களை பார்த்ததுண்டா?
பார்த்திருப்பீர்கள்.
இன்னும் ஒரு முறை
நடந்தோ, வாகனங்களிலோ
சென்றால்
நின்று
இமைகளை இழுத்து ரசித்து
ஒரு கொத்துப்பூவை
ஒடித்துக் கொண்டு போங்கள்.

○



எனக்குத் தெரிந்து
நம் ஊர்களில்
அதிக பூக்கள்
பூசிக் கொள்ளும் வண்ணம்
மஞ்சள் தான்.

○

ஒரு பெண் பூப்படைந்தால்
மஞ்சளால்தான் தன் சிவப்பை
வெளிப்படுத்துகிறாள்.
பூவும் அப்படித்தான்.
அதனால் தான்
எல்லா நிறப் பூக்களுக்கும்
மகரந்தம் மட்டும் மஞ்சள்.

○

என்னைப் பொறுத்த வரை
பூப்படையாத பெண் மட்டுமல்ல,
பூக்களும் மலடுதான்.

○

பூக்களைப்பறியுங்கள்,
அது
பூக்களின் கொலையல்ல,
பூக்களுக்கு நாம் கொடுக்கும் வரம்.

○

பறிக்கப்படாத பூவிற்காக,
செடிகள் அழுது
கண்ணீராய்
பூக்களையே உதிர்த்து விடுகின்றன.

○

விழுந்து கிடக்கும் பூக்களை
பார்க்கும் போதெல்லாம்,
என்
இதயம் விம்முகிறது.

○

கண்ணிகளில் சிக்கி,
கன்னிகளின் தலைக்கேற வேண்டிய
பூக்கள்
கண்ணீராய் உதிர்ந்து கிடக்கிறது.

○

செடிகள் அழுவது
எனக்குப் பிடிக்காது,
தயவு செய்து அழவிடாதீர்கள்.

○

கடவுளுக்கான உபசரிப்பில்
மஞ்சள் பூக்கள் மறுக்கப்படும்
ஏனெனில் அவைகள்
கடவுளை விடவும் உயர்ந்தவை.

○

காதலிக்காதவர்களே!
ஒருமுறை
மஞ்சள் பூக்களை
மணந்து பாருங்கள்.

○



பூக்களைப்பார்க்கும் போதெல்லாம்
என்னைப் பார்க்கிறேன்.
மஞ்சள் பூக்களைப்
பார்க்கும் போதெல்லாம்.
என்னிலிருந்து விலகி
என்னைப் பார்க்கிறேன்.
தியானத்தின் ஆழ்த்தத்துவம்
இது தானே!

○

மஞ்சள் பூக்கள் மட்டுமே
மலிவானவை;!
தெளிவானவை.!!

●

# தூறல்

மேகம் சலித்தெடுத்த திரவ வெள்ளி!
சோக வானம் சொட்டும் கண்ணீர்!
நீரில்லா மல்பிளந்து இருக்கும் பூமியை
பார்த்தழுது தைக்கும் நீரின் ஊசிகள்!
இல்லாத பாலை பிதுக்கி என்னிடம்,
சொல்லி சொல்லிக் காட்டும் வான்தாயின்
மேகமுலைத் துளிகள்! கரிக்கா வான்கண்ணீர்!
மேகவனின் கைப்பழக்கத் தால்விளைந்த விந்து!
என்றோ பிரிந்த இருமேகக் காதலர்கள்
இன்று சந்தித்ததால் இருக கட்டி
இதழ்முத்தம் சுவைப்பதால் வாய்கழுண்ட எச்சில்!
மோதலால் வெளிவரும் வெள்ளை இரத்தம்!
வானம் துப்பும் இளைத்த நீர்!
தேனும் பாலும் தோற்கும் வெண்நீர்!
தற்கொலை செய்யும் மழையின் பிள்ளைகள்!
பற்கள் இழிக்கும் மின்னலின் உமிழ்நீர்!
முகில்சித் திரம்வரைந் திருக்கும் வானவன்
திகிலடைந்து கையிடறி சிந்திய நிறத்துளிகள்!
மழைவரும் பாதையை சுத்தம் செய்ய
சிலைமேகம் துரத்தும் துப்புர வாளர்கள்!
ஈதோடு முடியட்டும் இக்கவிதை உங்களுக்கு
காதோடு ஒன்றுரைக் கின்றேன்நான் இஃது
கைகரை கக்கிய கவித்தூ றலல்ல
வைகறை மேகங்கள் துப்பிய சிறுதுளி..

●



# சாலையோர பழக்(ங்)கிழவி

அன்றொரு நாள்நானும் அதிகாலை நேரத்தில்
நின்றிருந்தேன் சாலையோ ரமங்கொரு கிழவி
பழப்பையென நினைக்கின்றேன் பத்திரமாய் அதையெடுத்து
கிழிந்தொரு கோணியினைக் கீழ்தரையில் அப்பிட்டாள்
கையிலொரு துணியெடுத்து கட்டிக் கொண்டாள்
பையிலிருந்து பழமெடுத்து கைத்துணியால் துடைத்தால்
அழுக்குப் பறிமாற்றம் துணிக்கும் பழத்திற்கும்
கழுத்து வலியென கணமொன்றில் திருப்பிட்டாள்
நரைத்தலை மயிரோ நெற்றிச் சுருக்கத்தில்
மறைந்திருந்து கைகளுக்கு வேலை சொன்னது
முதன்மூன்று அடுத்திரண்டு பின்னொன்று பின்னவள்
அதன்மேல் பத்துப் பத்தாய் கோணிமேல்
அப்பிட்டாள் பதினொன்று என்னப் பழமென
இதுவரை நானறியேன் ஏதேதோ இருந்தது
புதுப்பழமில் காட்டியது கண்ணிய இடங்கள்
எத்தனை வாடிக்கை யாளர்கள் இவள்கடையில்
அத்தனையும் புசித்துவிட்டு கடன்சொல்லும் ஈக்கள் அவளின்னும்
குளிக்கவில்லை கையிடுக்கு வியர்வைகள்
ரவிக்கை இல்லாத அவளைக் காட்டியது
என்பேருந் துத்தலைக் கெட்டியது தாவியே
முன்படியே றிநான் இருக்கை யமர்ந்தேன்
என்பணி முடிந்திட்டு மாலை வந்தேன்
கண்ணறலி அடித்துப் பார்த்தது கிழவியை
பதினொன்று கூறும் பத்திரமாய் அவளிடமே
மிதிபட்ட பூவாய் என்மீசை மடங்கியது
ஓடிப்போய் ஒருகூறு என்னவிலை என்றேன்
பாடினாள் பல்போன கிழவிபத் தென்று
கொஞ்சமும் யோசிக்கா இருந்தொருதாள் நீட்டினேன்
மிஞ்சியதை வாங்கவில்லை நெஞ்சம் வலிக்கிறது.

●

## எங்களூர் ஏரியில் நான்

உப்புக் கரிக்கா கடலதில்
உள்ளம் நிறைந்து வளியும்
தப்புப் புரியும் காதலர்கள்
கால் தடமிருக்கும் கரையெங்கும்
துப்பிய எச்சிலின் நுரைமுடிவு
கரைதொட்டுக் கரையும் முகத்தில்
அப்பிய கண்ணெங்கும் அடங்காத
அழகுநீர் சலனமில் லாதிருக்கம்

புழுவில்லாப் போட்டாலும் மீன்கடிக்கும்
புதுப்பாடல் கரையோட லைப்பாடும்
கழுகுகள் எப்போதும் கரைசுற்றும்
கவலைகள் இன்றிநா ரைகளும்
விழுந்து விழுந்துநீரில் மீன்கொத்தும்
விட்டெறிந்த கல்லோ மேல்நடக்கும்!
அழுது புலம்பி பலரிதில்
ஆயுளை முத்தாரும் உண்டே!

ஏரிவற்ற வற்ற எருமைகிடா
உப்பும் வடையல்ல உண்மையே
சேரிதான் எங்களூர் எல்லோரும்
சேருமிடம் ஈதுதான் சுடுகாடு
ஊரிலுள்ள விடலையெல் லாமிங்கே
ஒருமுறையே னும்வாரும் வாரத்தில்
காரிருள் சுரந்த பாலிதில்கை
விரித்துநீச்சல் அடித்துள்ளேன் நான்.



பனைமரம் இரண்டுண்டு கரைகுறுக்கே
அதிலேறி குதித்துள்ளேன் பலரில்நான்
சினைமாடு நீர்விழவே பதறிப்போய்
அதைமீட்கப் பாய்ந்துள்ளேன் இறந்தபின்
முனையெங்கே நானறியேன் கடல்தோற்றம்
காட்சியிதை காணப்போ தாதிருக்கண்
எனைக்கூட ஓர்நாள் ஏப்பமிட
எண்ணியது தப்பித்து விட்டேன்.

ஈதெல்லாம் நிகழ்ந்து ஆண்டுகள்
பத்தாகி இன்றுநான் காணு கிறேன்
ஏதேதோ மாறிப்போய் நீரெல்லாம்
வற்றிப்போய் முள்ளேறி ஆனது
காதெல்லாம் செவிடுபோல் மெல்லொலி
கூடஇல்லா காடெல்லாம் அருகில்
நகர்ந்ததால் வீடுகளும் அதிலேறி
அமர்ந்தது நிறையவில்லை கண்ணீரில்..

●

●

எல்லாப் பேருந்தின்
முன்பக்க கண்ணாடியிலும்
நிரம்பி வழிகிறது.
யாராவது இரண்டு
அழகு பெண்களின்
முகங்கள்..

●



●

உன்னை நான்
விரும்பவே இல்லை!
உளவியல் சொல்கிறது
மனித உள்ளம்
ஒருவரை,
விரும்பும் அளவிற்கு
வெறுக்கவும் செய்கிறதாம்
அதனால் தான் சொல்கிறேன்.
உன்னை நான்
விரும்பவே இல்லை!

●

●

உன் இடையின்
கொழுத்த சதை மடிப்புகளை
எண்ணி, எண்ணி
உண்ணாமல்
இளைத்துப் போனேன்;
உன்
இறுக்கமான ஆடைகளில்
தளர்ந்து போனவனும் நானே!

●



●

இறந்தால்
இப்படித்தான் இருக்குமோ?
தயவு செய்து
பேசி விடு!

●

●

இதயத்தை,

லேசாய் திற

நான் மட்டும் நுழைய!

●



●

மழையில் நனைந்த

சிட்டுக்குருவி நான்

உன்

மடியென்னும் கூட்டுக்குள்

ஒளித்துக் கொள்..

●

●

பூ மேல் புழுதி,
ஒப்பனைத் தூள்
அப்பிய முகத்தோடு
என்னவள்..

●



**இதில்**

சந்திப் பிழைகள் சகிக்குமள வுண்டிதில்
சிந்தனைக் குற்றங்கள் சிற்சில; சொந்த
அனுபவம் ஒன்றிரண்டு; சுட்டதென் றாலும்
மனதால் மணந்தால் மலர்.

●

## இன்று நீ இருந்தால்

பாரதியே!
எரிந்து விட்ட நெருப்பின் எச்சமே!
பச்சைத்திமிரே!

○

பாட்டில் பயிர் வளர்த்தவன்
அறுவடை முடியும் முன்னே
ஏனோ
அவசரமாய் புறப்பட்டாய்.?

○

சாதியே இல்லாத
சமத்துவ பூமி,
பெண்ணடிமை என்ற பேச்சே இருக்காது,
பாடிய
நதிகள் அனைத்தும்
பார்வைக்காவது கிடைத்திருக்கும்.
காதல்
கண்ணிய மாயிருக்கும்,
தேடல்
தீர்க்கமாயிருக்கும்.
இருக்கும், இருக்கும்
இப்படியெல்லாம் இருந்திருக்கும்
என்று என்னால் பொய் சொல்ல முடியாது.

○



இன்னும் உள்ளது இரட்டை தம்ளர் முறை..
மூன்றிலிருந்தே
பெண்
பாலியல் இச்சைக்குப்பதப்படுத்தப் படுகிறாளாம்
வழியும் தண்ணீரையே
வரவிடாக் கூட்டம்
காதலி கற்பம் காதலன் மறுப்பு
தற்கொலையில் பிறக்கும் இருபது வயது

○

பாரதியே!
‘சாதிகள் இல்லையடி பாப்பா’
‘காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வைகை பொருண்ணை நதி’
‘பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்’
இவ்வாறு எழுதியதற்காய்
விரல்களை வெட்டிக் கொண்டு
என் கவிகள் அத்தனையும்
விழலுக் கிரைத்த நீரானதே
என்ற
விரக்தியிலேயே
வீழ்ந்து போவாய் பாரதியே!

●

●

உங்களில்

யாருக்குப் பைத்தியம்?

காற்றே!

மரமே!

●



## நெருஞ்சிப்பூ

சூரியன் துப்பிய சுடாத நெருப்பு!
பாரினில் படந்த மஞ்சள் கவிதை!
ஆதவன் வியர்வைகள் அத்தனையும் பூக்கள்!
காதல் கன்னியரின் கனிவெடி இதழ்கள்!
பூமியே எழுதிடும் புதுக்கவிப் பிழைகள்!
சேமித்த வானம் சிந்திய சில்லரை!
கள்ளூற்றி வைத்திருக்கும் தங்கக் கிண்ணம்!
முள்கனவ னுடன்படுத் திருக்கும் மஞ்ஞைகள்!
பூப்படைந்த பூமியின் புதுமஞ்சள் இரத்தம்!
ஏப்பமிடும் பொன்நிலவின் எச்சில் துளிகள்!
பகலினில் பூமியின்மேல் படர்ந்த பச்சிருளை
தகவல் அறிந்து சூரியன் ஏற்றிய
சுடர்சுவளை சிட்டிகைகள் சுண்ணப் பொடிக்குவளை!
படர்ந்திருக்கும் பசுந்தேக கொடிமகள் தழும்புகள்
இந்தமேல் கனைப்பென் னறிவிற் கெட்டியதே
சிந்தித்தேன் மேலும்நான் சின்னவதில் செய்ததை
அறியாத வயதந்த பத்தில் அத்தைக்கு
தெரியாது அவள்மகளை கூட்டிவந்தேன் ஏரிக்கு.
அத்தையின் அழகுமகள் அஞ்சலியின் நகைவிட
சித்திரம்போல் சின்னப்பூச் சிரித்திருந்த தைக்கண்டேன்
அப்பூவை நான்பறித்து அழகுமயில் உடலெங்கும்
அப்பினேன் சிந்திக்கின் றேன்நெற்றிக் கண்ணம்
மூக்கின் இருபக்கம் முத்தவாய்க் கடையில்
வாக்குச்சி செவிக்குக்கீழ் வளராத முலைக்காம்பு
பாதத்தின் விரலெங்கும் நகப்பூ மறைத்தவாறு
காதலொன்று சொல்லிப்பின் கட்டிக் கொண்டேன்
போதுமடா! போதுமடா! என்றுரைக் கிறிரா!

ஆசுநிரை இக்கவிதை சுகமாய் நிறையட்டும்
எனைவிட மடையரே நானொன்று ரைப்பேன்
தனைமிதிப் பாரைஇப் பூத்தாக்கும் முள்ளால்
இந்தக் கோபம் இல்லை பலர்க்கு
செந்த அனுபவம் சொன்னால் கேளுங்கள்!

●



## சித்திரை மழையில்

ஊடலையும் கூடலையும் உண்டுவிட்ட வானம்,
தேடலை நிறுத்தாத காதலித்த மேகம்.
அடிக்கடி வானின் அடர்நீல ஆடை
பிடிக்க ஆளில்லா மல்அவிளும் மழையாக
மதியம் இரவுபோல் மந்தமாய் இருந்தது.
சரியாக மணியொன்று சத்தமிட்டார் தந்தை
மாடெருமை கிடக்கிறது கட்டியே நீயென்ன
வீடே வராமல் வெளிச்சுற்றித் திரிகின்றாய்
பல்கடித்து வந்தேன் பாழ்நிலத்து ஏரிக்கு
சொல்லாத போதும் சொத்தைப்பல் கருவாச்சி
என்முன் ஏரியில் ஏழெட்டு மாடுடன்
சின்னப்பூச் சிரித்தது சிங்காரம் செய்திருந்த
கருங்காக்கா கொண்டையில் கனமான மல்லிப்பூ
பெருமூச்சில் மேலேறும் பெரியதிரு மார்பு
சுடர்விழி யாளை சலிக்காமல் பார்க்கத்
தடையேதும் இல்லை தாவணிப்பூ வைரசிக்க
கால்சட்டை கிழிந்தமேல் சட்டை கைத்துண்டு
பால்நிறத்து வெண்ரவிக்கை பச்சைநிறப் பாவாடை
மேல்சொன்ன தென்னது கீழுள்ள தவளது
வேல்விழியா ளைவிழியால் விழுங்கியிருப்பேன் விழிப்பெரிதில்
யாருமில்லை என்னையும், அவளையும் தவிர.
கருமேகம் தேம்பி கண்சிமிட்டி அழுதது.
கொஞ்சம் நனைந்தோம் நானும் அவளும்
மிஞ்சாது என்று மீறி வழுத்தது
மரத்தடி நான்சேர்ந்தேன் மாட்டேன் எனமறுத்தாள்
சிரம்போகும் அங்குநின்றால் மின்னொலி தாக்கி
வாவென்றாள் பாதியோ மழையில் கரைந்தது
பூவென்ற மெல்லுதட்டு வார்த்தையில் நானுதிர்ந்தேன்
ஏரிதள்ளி தூரத்தில் எரிந்தணைந்த பரண்சாலை

பூரித்துப் போனாள் போவோம் வாவென்றாள்
ஓடினோம் வேகத்திற் கேற்பமழை யுமதிகம்
விடியாத இரவுக்கு வெள்ளிமீன் ஒளிபோல
கொஞ்சம் வெளிச்சம் கொஞ்சி இருந்தது.
தஞ்சம் புகுந்தஇடம் நீரிரைக்கும் இயந்திரம்
விண்ணப்பம் போடாமல் வீற்றி ருந்தது.
எண்ணம் மறந்தது மாடெருமை பற்றி
மழையின் ஓசைக்கு மண்நிறைந்த கிணற்றுத்
தவளையின் தாளம் சரியாக இருந்தது.
காதுக்கு இதுகேட்க கண்மயங்கி நாணினேன்
ஈதுபோல்தான் நானும் ஏதுமறியா இருக்கின்றேன்
பள்ளிக்கு நானும் இந்நிலையில் தஞ்சமில்லை
சுள்ளி பொறுக்கிச் சுற்றியவள் தானிவளும்
எப்படி இந்தறிவோ எண்ணிநான் சிரித்திருந்தேன்
அப்படியென் மென்சிரிப்பு அவளென்னை கேட்டாள்
அதிர்ந்து போனேன் திரும்பி பார்த்ததில்
உதிரக் குங்கும இடம்மட்டும் தெரிந்தது
முகத்தினில் முன்முடிக் கோலம் பழகிறது.
அகத்தின் ஆசை அவள்கண்ணில் கசிந்தது
தாவணி தடுமாறி தரைவிழுந்து எந்தன்
ஜுவன் எடுத்தது சின்னவளின் பூமார்பு
வெண்துணியில் வியர்த்தாலே கருஞ்சதையும் கண்முட்டும்
வண்ணங்கள் குழைத்து வார்த்த அவள் முலையோ
என்னுயிர் பாதியினை வாய்மடுத்துப் புசித்தது
சின்னஇடை மீதியினை சிந்தாமல் குடித்தது..
மழைவழுத்து எந்தன் ஏக்கத்தைக் கூட்டியது
தாழைத் தளிரைக் கண்கண்டு வியர்த்தது
விழுந்த தாவணியை குனிந்தெடுத்து போர்த்திட்டு
அம்மழைக் கிதமாய் அணைத்திட்டாள் அவளையே
நடுக்கம் தொடக்கம் எனக்கு அவளை
உடுத்திய பின்னும் அடங்க வில்லையே!

●



## நானும் மனமும்

அன்றொரு நாள்நானும் ஆற்றங் கரையில்
தின்றுமுடித் தச்சோளக் கருதினைத் திருப்பித்
திருப்பிப் பார்த்துவிட்டு, ஆற்றில் எரிந்தேன்.
பருத்திச் சட்டையினை பாய்போல விரித்து
ஆற்றங் கரைமீது ஆகாயம் விரிய
விற்கப் பட்டமேகங் களைவிலை கேட்டிருந்தேன்
விழியிரண்டும் இமைக்குள் புதைந்து தூக்கம்
இழித்துக் கொண்டு இருகையால் தூக்கியது
நின்றுகொண் டொருவன் படுத்துக் கொண்டொருவன்
மனசாட்சி என்றுசொல்லி மறுகணமே கேட்டான்
‘ஏன்அவளி டம்மட்டும் அதிகம் பேசுகிறாய்’
‘தோன்கிற தேதோ தவறேதும் இல்லையே’
தேவையில் லாப்போதும் அடிக்கடிப் பார்க்கிறாய்’
‘பூவை ரசிக்க காலம் வேண்டுமா?’
‘அவள்மட்டுந் தான்அழகா’ ‘அழகிகளின் பட்டியலில்
அவளும் உண்டு’ ‘அதையேன் கேற்கிறாய்?’
‘மழுப்பாமல் பதில்சொல் நான்உன் மனம்’.
‘அழுக்காக பேசாதே நீஎன் அடிமை’
‘பெண்கள் ஆயிரம் அவளிடம் மட்டும்’
‘புண்ணிற்கு மருந்து எல்லாம் ஆகாதே’
‘நீயென்ன அவளை காதலிக் கிறாயா
பேயனே’ ‘இல்லை, இருந்தாலும் தவறில்லை’
‘என்னதான் கொண்டுள்ளாய் அவளிடம் நீசொல்’
‘அன்பென்று சொல்லி சிறுபுட்டி தன்னில்
அடைக்கவும் முடியாது காதலென்று சொல்லி
விடைதெரியா கேள்விபோல் விட்டிடவும் முடியாது
காதலையும் அன்பையும் கலந்துசெய்த உணர்வு
வேதம் போன்றது வீண்குறை சொல்லாதே’
‘வேறென்ன வேண்டும் அவளிடம் உனக்கு’
‘காரித் துப்புவேன் உன்தன் முகத்தில்’.

‘விரிஇதழ் கிழியுமளவு முத்தம் ச்சீசிச்’
‘திருமார்பு கசக்கி சாறெடுக்க’ ‘ஏய்
‘உருக்கிஊட் டவாகாமக் கொழுப்பை’ ‘இல்லை’
‘என்னதான் வேண்டும்? என்னதான் வேண்டும்?
‘நேற்று பார்த்த திரைப்படத்தை என்னிடம்
வேற்றுமை பாராமல் விமர்சிக்க வேண்டும்’
பாடல்களில் அதுகேள் இதுகேள் என்றென்னை
சாடவேண்டும் காணுங் காயெல் லாம்வணக்கம்
பார்க்கும் இடமெல்லாம் பூவிதழ் புன்னகை.
போடி என்றாலும் பொல்லாப்பு கொல்லாது
தேடிவந்து பேச வேண்டும் போடா
என்றென்னை சிலநேரம் அழைக்க வேண்டும்.
அரிசெயல் நான்செய்தால் பூவிதழ் முத்தமென்
விரிகண்ணத் தில்விழ வேண்டும் நானும்
அதுபோல சிலநேரம் கண்ணக் காகிதத்தில்
புதுமொழி எழுதிப் பார்க்க வேண்டும்.
இன்றும் நாளையும் எப்போதும் எனக்காய்
சிலநொடிகள் சம்பளம் கேட்காமல் சலிக்காமல்
வேலை பாக்க வேண்டும். அவள்
இதுவும் இன்னும் பலவுமி ருந்தால்நல்’
‘பொதுவான ஆசைதான் தவறொன்றும் இல்லை
நீவிரும்பு மெல்லாம் வேறெருவள் தருகிறாள்
போயிருமா உன்மனம் பொய்யேதும் சொல்லாதே!
‘காசுதரு கிறாளென்று கண்டவனை உரசும்
வேசியல்ல நான் எனக்காக வேநிலவு
உருக்கி செய்த வெண்முத்து மாலையை
திருப்பித் தரமுடியாது வேறொருவர் தீண்டிடவும்
முடியாது.! முனுகியது மனசாட்சி போடா!
விடியாத இரவுக்கு வெள்ளையா அடிப்பது!.

●



## ஹைக்கூவிற்கு கன்னி முயற்சி

முட்களின் இரவுக் கூடல்
ஒலித்த முதல் ஒலி
விழித்த உறக்கம்.

●

●

மல்லாந்து படுத்து
லேசாய் ஊதுகிறேன்,
மெதுவாய் நகர்கிறது மேகம்.

●



●

சரியாக நிறுத்தினேன்
மிதிவண்டியை
நத்தை நசுங்காதவாறு!

●

●

பட்டாம் பூச்சி
ஒய்வெடுக்கிறது
முக்கிய சாலையின் மத்தியில்.

●



●

அவிழ்க்கப்படும் எருமை
முகத்தை நக்கும்
விற்கப் படும் போது.

●

●

அவளின்
இதழ் விரியாப் புன்னகையில்,
ஆயிரம் ஹைக்கூக்கள்!

●



●

நீ,
ஆடை முழுவதும் நீக்கி,
நிர்வாணமாய் நின்றிருந்தாலும்
எனக்கு
ஏற்பட்டிருக்குமா
என்று தெரியாது?
உன்
துளிர் புன்னகை தூண்டியதே
அந்தக் காமம்!

●

●

கல்யாண மானால்
சொல்லி யனுப்பு,
என்
கல்லறை பூக்கள்
வாழ்த்து அனுப்பும்..

●



●

நாம்
இயல்பாய் பேசிக் கொண்டிருக்கும் போது
இடையில் ஒரு மௌனம்.
அப்போது
சொல்லி விடவா?

●

●

இன்னும்
என்ன வேண்டும்**?**
என் தூக்கம்,
உணவு,
சுயம்
எல்லாவற்றையும்
கொடுத்து விட்டேனே!

●



●

உன்
முதல் பூப்பின்
பயம் போலத்தான்;
எனக்கும் இருந்தது,
உன்னைப் பற்றிய
முதல் நினைவும்.

●

அவள்,
ஊறிப் போகாமல்
என்ன செய்வாள்.
என்
உணவையும்
சேர்த்தல்லவா உண்ணுகிறாள்.!



மறுப்பாய்
என்று தெரிந்தே!
என்
காதலைச் சொன்னேன்.
நீயோ
மௌனமாய் போய் விட்டாய்.
காதலை
சொல்லாமல் இருந்ததை விட
இப்போது தான்
அதிகமாய் வலிக்கிறது.

## கருகும் மொட்டுகள்

அவிழாத மொட்டுகளின்
ஆடைகள்
அவிழ்க்கப்படுகிறது.!
அவர்களின்
பூந்தேகப் புள்ளிகளில்
புணர்ச்சி பாடம் நடத்தப்படுகிறது.

○

தீக்கிரை யாக்கப்பட்ட
மொட்டுகளின் புகைபடத்தை
கருக்கிய மனித மிருகங்களின்
புகைபடத்தை
பத்திரிக்கையில் பார்த்து
பதைக்க மட்டுமே முடிகிறது.

○

எழுத்துகளின் புணர்ச்சி கூட
புரியாத
பள்ளிப் பூக்களுக்கு
உடல்களின் புணர்ச்சி,
அவர்கள்
உணராமலேயே ஊட்டப்படுகிறது.

○

மரண வார்த்தையை
அறியாமலேயே
மரணித்து விடுகிறார்கள்.



புணர்ச்சி என்ற
வார்த்தை
உச்சரிக்க கூட தெரியாதவர்களுக்கு
உணர்த்தப்படுகிறது.

○

14வயது சிறுமி
60 வயது கிழவன்
ஐயோ
இறைவன் அவனை
அவ்வளவு காலமா
விட்டு வைத்திருக்கிறான்.

○

சில ஏணிப்படிகள் கூட
எச்சிலையும் சளியையும்
பாவாடையில் துடைக்கம்
பள்ளிப் பிஞ்சுகளை
கட்டாயப் படுத்தி கடிக்கிறார்கள்.
என்ன செய்ய
அந்தப்படிகள் அகற்றப் படுவதை
காட்டிலும்
அழிக்கப் படுவதே நன்று.

○

காமம் உடலளவில்
உள்ளது தான் நன்று.
அது
உள்ளத்திற்கு
பயணிக்கும் போதுதான்
உணர்ச்சிகள்
அடிமையாகி வின்றன.

○

இனி
மொட்டுகளைக்
கசக்குபவன் யாராயினும்
வெட்டுகள்
விழ வேண்டும்
உடலெங்கும்.
சிறைக்கு
சுற்றுலா அனுப்ப
சம்மத மில்லை
அம்மனமாய் நிறுத்தி
இறக்கும் வரை
எறியப்பட வேண்டும் கற்கள்..

●



## முதலிரவு

பூவும் வண்டும் தேனக்குள் விழும்,
நிலவும் அதிலே
சேர்ந்தே கரையும்,
தேகங்கள் தேய தேய
வியர்வை விஷம் வழியும்,
மோகங்கள் கூட கூட
மூச்சும் ஏனோ முட்டும்,
விருமப் பிடியில் இருவுடல்கள்
இந்தக் கருமத்தில் ஆயிரம் சுகவலியே.!

●

## தியாகம்

சரியாக
மணிப்பணி ரெண்டு
நானோ,
திருக்குறளில் பிறனில் விழையாமை
படித்துக்கொண்டிருந்தேன்.
வெளியூர் வேலைக்கு சென்ற
அவன் மனைவியின்
படுக்கையறையும்,
என்
படிப்பறையும்,
குறுக்குச் சுவர்களால்
இணைந்திருந்தது.
வளையல் ஓசையும்,
கொலுசின் கெஞ்சலும்
என்
காதைப் பிளக்கிறது.
ஆறு மணிக்கு
அவள்
குளித்து முடித்துத் சூடிய மல்லி
சுருங்கிய
படுக்கை விரிப்பின் இடுக்குகளில்
மாட்டிக் கொண்டு,
என்னை
விடுவிக்க வா, வா என்றழைத்தவாறே
அழுகிறது.
அவளின்
கட்டழகை ஒரு நிமிடம்
கண்முன் நிறுத்த,



என்
மூச்சுக் காற்றுக்கு
அதிகப்பட்ச காய்ச்சல்..
அவளின்
முணுகள்களை
என்தன் விரல்களும், இதழ்களும்
தந்தியடித்தது.
அவள் ஒப்புக் கொண்டால்
நான்
தவறு செய்து, திருக்குறளை
காப்பாற்றி விட்டேன்.
அது
வாழ வேண்டும் என்பதற்காகவே.!

●

## பள்ளிக்காதல்

கல்வி எனும் கயிற்றாலே
பள்ளியிலே அவளுடன் கட்டுண்டேன்.
பொல்லாத பிரிவென்னும் கத்திப்
பட்டு பூமகளை பிரிவுற்றேன்.
இல்லாத போதுதான் எப்பொருளின்
அருமையும் தெரியு மென்பார்.
சொல்லா தெங்குபோவேன் என்னவள்
எனக்கூட்டி அவளுண்ட சொர்க்கத்தை.

எட்டரை மணிக்கெல்லாம் என்னிதய
பூங்கொடி எப்படியும் பள்ளியிலே,
கட்டுண்ட கயிற்றிலே மறுமுனையில்
நான்தானே பூமுன் வண்டாய்நான்.
எட்டாத உயரத்தில் என்னவள்
சாதியிலே அவள்முன்நான் வீதியிலே.
தொட்டதே இல்லை இன்றுவரை
பனியுடலை சுடாத தீச்சிலையாள்.

கண்ணிமைக்கும் நிலவுப்பூ என்காதல்
தேன்குடித்த சிறகில்லாத் தும்பிப்பூ.
பெண்மலரை கண்பார்த்து வியர்த்தாலும்
பார்வைகள் மீளாது பாவம்நான்.
மண்ணை ஒருநிமிடம் என்னை
ஒருநிமிடம் மறக்காது அவள்விழியும்.
பண்பாடும் பூங்குயிலின் பார்வையே
போதுமே என்னுயிரை கிழித்தெரிய.



பந்துரண்டை பெண்மார்பு பால்வடியும்
அம்புலி கருங்குவளை கண்ணிரண்டு
சந்துப்பல் செதுமொழி சலிக்காமல்
நெற்றித் தொடும் பூமுடி.
செந்நிற காம்பிடை எப்போ
துடையும் தேன்குடிக்கும் மடல்காது
முந்துமொழி பேசிவிட்டு எல்லோரும்
திட்டும் என்னருமை செவ்விதழ்.

இத்தனையும் மறந்ததில்லை எண்ணமும்
என்னிரண்டு கண்ணும் தான் என்
சித்தம் நிறைந்த சின்னப்பூ
அவளிடம் தாகமில்லாப் போதும்
பித்துப் பிடித்தவன் போல்தினமும்
உப்புநீர் வாங்கி உண்ணுவேன்.
பத்து நொடிக்கொரு முறையேனும்
பார்த்தென்னை தைப்பாள் தையல்.

ஏதுண்டாலும் என்னிடம் கேட்பாள்
மறுப்பேன் என்று தெரிந்தே.
காதுவழி தேன்பாய்ச்சும் கன்னிமகள்
என்னவளின் ஆறன்ன விரைபேச்சு
போதுமென் றாலும் விடாள்.
பெண்மலர் அவளிடம் ஓர்நாள்
ஈது காதல்தான் என்னென்றேன்?
தலைகுனிந்து தாரையாய் நீர்வடித்தாள்.

பள்ளிக்கு வந்தவுடன் வணக்கமில்லை,
வாய்க் குவிந்த சிரிப்பில்லை,
முள்ளில்லா பெண்ரோஜா என்னவள்
முகம்பார்க்கக் கூட விட்டிடாள்.
தள்ளிநின்று எனைக்கொன்றாள், தாக
மென்றால் காலிபுட்டி காண்பித்தாள்.
பள்ளியே வீனென்றேன் ஆனாலும்
பனிரெண்டில் முதல்வகுப்பில் தேறிவிட்டேன்.

முடிவுகள் வெளியான முதல்நாளே
என்னவள் முகத்தில் ஒளியில்லை.
கடித்தெறிந்த மாங்காயாய் கன்னியவள்
முகம் வாட நானோ
துடித்துப் போனேன்! முடிவை
கிழித்தெரிந்தேன் நான்கொண்ட காதல்
படிப்பல்ல என்றுரைத்தேன் முடிவென்னும்
பரிதியால் பனிமகள் மறைந்தாள்.

இரண்டொரு நாளில் என்னவள்
நினைவறுந்து போனது பெண்ணவளின்
பூரண நிலவு முகம்
புழுதி மேகம் மறைத்ததுவே.
பரண்மீது படுத்திருந்த பூனையாய்
அவள்நினைவு பறந்தோடி போனதுவே
இரந்ததால் ஒருமாதம் இறந்து
போனது என்னவள் நினைவில்லா



கல்லூரி சேருமந்த நினைவிலே
கருங்கல் சாலையில் அலைந்திருந்தேன்.
வில்புருவ கண்ணாளை விழிபார்த்து
விம்மியழ வில்லை ஆசையில்
புல்வளர்த்தேன் அவளறுவாள் கொண்டறுப்பேன்.
அத்தை மகளிடம் ஒத்திகையில்
பல்கடித்து பயின்றதை அழகுமயில்
இவள்மேனி மேடையில் அரங்கேற்ற,

இன்னொரு நாளவளை நான்கண்டேன்
இதமாய் மெல்சிரித்து பொன்மகள்
என்னிடம் கேட்டால் நலமா
நலமென்று நானுரைத்து இவளே
உன்னிடை உடைத்து கனியிதழ்
கடித்தெடுத்து முலைபிதுக்கி முள்குத்தி
உன்னுடலை நான்தைப்பேன் இதைநீயே
கேட்பாய் என்றுரைத்து விரைந்தேன்.

வருடம் ஒன்றினை வாழ்ந்துவிட்டேன்
கல்லூரிச் சென்னையில் தனியாக.
பருகிய நினைவோடு பயணித்தேன்
வீட்டிற்கு, என்னவள் எதிரே
அருகினில் ஆண்மகன் வயிறு
உப்பும் அளவிற்கு ஊட்டியவன்.
நெருங்கி வந்தாள் என்னிடம்
நினைவு திரும்ப மெல்சிரித்தாள்..

இடையொடி இதழ்கடி முலைப்பிதுக்கு
முள்குத்து என்னை என்றாள்
துடைநடுங்கிப் போனேன்நான் அவளும்
தூரப்போய் அமர்ந்தாள். எந்தன்
மடைத்தனம் நானுணர்ந்தேன் பள்ளிக்
காதலெல்லாம் காதலில்லை திறந்த
மடையென கண்ணீர் வழியஏதோ
திருப்தியோடு வீடு வந்தேன்.

●



## சுதந்திர சிந்தனை

இரத்தின் சுத்தம்கண்ட நாட்களென் கண்முன்னே
சித்தத்தின் மத்தியில் சிவப்பாய் விரிகிறது.
அதையிங்கு அடியேன்நான் அவைமுன்பு அவிழ்க்கின்றேன்.
சுவையில்லா மாங்கனியை சுவையறிந்தோர் மன்னிக்க.
அன்னார்கள் போரிட்ட அந்நாளில் நானில்லை.
சொன்னதை வாங்கி சுவைபட சொல்கின்றேன்.
யோசித்துத் தலையணையில் ஒய்யாரமாய் சாய்ந்தபோது,
வாசிக்க வேண்டிவைகள் வழியில் நிற்கிறது.
எச்சில் காயாத எதிரியின் பூட்ஸ்,
உச்சி வெய்யிலில் ஊர்வலமிடும் கூட்டம்,
அடித்த லத்தி அனாதையாய் கிடக்கிறது,
வடித்த கண்ணீரோ வறுமையின் நிறம்,
சுடப்பட்ட காந்தியின் சொட்டும் இரத்தம்.
நடுங்காத கையோடு நம்மவன் கோட்சே,
வாலாபாக் படுகொலை வரிசையாய் பிணங்கள்
உலகமே அதிர ஓலமிடும் மக்கள்,
உப்புக் காய்ச்ச உரையிடும் காந்தி,
தப்பாமல் அதைசெய்யும் நம்மூர் இராஜாஜி,
கயத்தாறே கலங்கும் கட்டபொம்மன் மரணம்.
பயத்தால் நடுக்கும் பரதேசி எட்டப்பன்.
தீப்பற்ற வைக்கும் பாரதி கவிதைகள்.
அப்படியா எனஅதிரும் அன்னிய கூட்டங்கள்.
நாவாய் வாங்கும் நம்மவர் சிதம்பரனார்.
கோவத்தில் சிவக்கும் கொலையாளி விழிகள்.
எந்தன் சித்தத்தில் இதுமட்டும் வரவில்லை,
வந்து குவிந்த வரலாற்று நிகழ்ச்சியினை
சொல்லித் தீராது சொல்லவும் நேரமேது.
கல்லிட்ட குளமாய் கலங்கியது என்மனம்
சிந்தனையில் வந்தவற்றை வாசிக்க வாசிக்க
கல்லிட்ட குளமாய் கலங்கியது என்மனம் – இதை
சொல்லித் தீராது சொல்லவும் நேரமேது..

●

## கல்லூரிக் கனவு

கல்லூரி சேர்ந்தமுதல் மாதமே எந்தன்
கவிதொகுப்பு வெளியாக வேண்டும் என்னை
வில்புருவ மங்கையர் வேசியர் கூட்டம்போல்
வேடிக்கை பார்த்தழைத்து அணைக்க வேண்டும்.
பல்லிழித்து கல்லூரிப் பெண்கள் பலரென்னை
பட்டாடை போல்தொட்டுக் கிடக்க வேண்டும்.
மெல்சிரித்து சிலபூக்கள் என்மேனி வண்டுடலை
மேயவேண்டும் நான்தேன்உண் டுசிக்க வேண்டும்

இரியரும் என்னிடம் ஆசுகேள் வேண்டும்.
இழித்தவாறே பெண்ணியர் வழிய வேண்டும்.
பெரியோர் தொடர்பு நான்கொள்ள வேண்டும்.
பேதமில்லா எல்லோரும் பழக வேண்டும்.
கரியோன் என்னை பெண்காணும் போதெல்லாம்
கண்சிவந்து தீச்சிவப்பில் பூப்பெய்த வேண்டும்.
விரியாத பெண்ணவளின் பொன்மார்பு எனைப்பார்த்தால்
விம்மியழ வேண்டும்; சாக்கடைத் தாமரையாள்,

சந்தேக சரம்தொடுக்க ஆசிரியரா டிப்போக
சலிக்காமல் என்பணி நான்செய்ய வேண்டும்.
எந்தன் துறையில் நானே முதலாய்
எப்போதும் நந்தா விளக்காக வேண்டும்.
முந்தியோடி புகழுச்சி அமர வேண்டும்.
முறிந்தாலும் பெண்மடியில் விழ வேண்டும்.
நிந்திக்கா தீர்பெண்ணே வாழ்வல்ல என்வார்த்தை
நீரோடை மீன்கண்ணாள் ‘பெண்ணும் வாழ்வு’.



இத்தனைக் கனவுகள் என்னிரு விழியிலும்,
இரவினில் முடிவுகள் வெளிவரும் முந்நாள்.
முத்தளச்சில் காயுமுன்னே கண்ணம் உடைந்து,
முடிவு என்கனவை எட்டி உதைத்தது.
முத்துத் தமிழ்தவிர எல்லா வற்றிலும்
நல்மதிப்பெண் என்னவள் ஏமாற்றினா லென்னை
சித்தம் நிறைந்த தமிழ்படிக்க விண்ணப்பம்
சீக்கிரம் செய்தேன் அரசுக்கல் லூரியில்.

என்னைவிட அதிகம் முப்பது இருப்பாரே
காத்திருப்போர் பட்டியலில் கால்வலிக்க நிற்கின்றார்.
உன்னை யெல்லாம் என்றாரம் பித்தென்னை
ஊரார் பலரும் திட்டிச் சலித்தார்
இன்தமிழே என்னுயிரே உனைப்புசிக்க மதிப்பெண்ணா?
இருநூறுக் கிருநூறு மதிப்பெண் ஆகாதா
உன்மீது நான்கொண்ட காதல் எனையேனோ
நீவெறுத்தாய் பூந்தமிழே பூவளர் தேன்தமிழே.

அந்தநாள் தொடங்கி கல்லூரிக் கலையாத
நாளில்லை துறைத்தலைவர் துரத்தும் வரைநிற்பேன்.
சிந்திய கண்ணீரை சேர்த்திருந்தால் தமிழ்நாட்டு
தண்ணீர் பஞ்சம் தாராளமாய் தீர்ந்திருக்கும்.
சந்தத் தமிழ்படிக்க மாணக்கர் வரும்போது
சங்கு கழுத்துவிம்மி சரிந்துவிழும் கண்ணீர்
மிஞ்சியது ஏக்கந்தான் மீன்சமைத்தால் எஞ்சிய
முள்ளாய் தூக்கி எரியப் பட்டேன்.

எல்லோரும் சேர்ந்து முடித்தசில நாள்கழித்து
எனைத் தொடர்ந்து என்தாய் அழுதாள்.
கல்லூரி முதல்வருக்கு கண்ணில்லை போலும்
என்தாய் அழுதது எள்ளளவும் புரியவில்லை,
பல்லிழித்து என்தந்தை தினமொரு கட்சிவீட்டை
தட்டியும் பயனில்லை சிபாரிசுக்கு பின்நான்
புல்லென மடங்கிப் போனேன். ஏழை
ஆதலால் தனியாரில் படிக்க தாராளமில்லை.

மாதம் ஒன்றாகி மாண்டது மடங்கிய
என்னுயிர் புத்துயிர் பெறஎன் தந்தையும்
சாதம் தூக்கிய பையோடு சரியெடு
என்றார் வேலைக்கு அடுத்த வருடம்
மீதம் பார்ப்போம் அதற்கள் ஈதென்றார்.
மிஞ்சிய திதுதான் ஈதே பார்ப்போம்.
காதல் கொண்டார்க்கு கண்ணீர்தான் – மிஞ்சுமாம்
என்னைப்போல் நீங்களும் இமைசிவக்க அழாதீர்..

●



●

காலந்தோறும்
பாங்கி,
பாங்கியாகவே இருக்கிறாள்.
பாழய் போன
காதல்,
அவளுக்கு வாரதோ!
அவள் தலைவி ஆகாளோ!

●

## தமிழிளை ஞா

நகம் கேட்டால்
விரல் கொடு! – எதிரியின்
நரம்பறுத்து,
வீணை செய்!
காதலியின் காலை நக்கு!

●



## குறள் புகழ்

உலகத்தின்
நீள அகலங்களை
ஒன்றரை அடியில் அளந்தவன்
நீ மட்டுமே!

○

எழு சீர்களால்
ஏழ் பிறப்பையும்
கட்டி வைத்தவனும் நீதான்.!

○

முப்பாலையும் முத்தத்தின் இதமாய்
சொன்னவனும் நீ தானே!.

○

உன்
ஆயுட் காலத்தின்
அனைத்து நூல்களையும் வென்றவன்!
இன்று கூட
இதற்கு இணை ஏதுமில்லை!.

○

இன்று
காதல் கவிதை எழுதும்
கவிஞர்கள் பலரில்
உன்
இன்பத்துப் பாலின்
இரண்டொன்றை படித்தவர்கள் தான்

○

மனிதஉயிர் நீளும் புவிதாண்டி ஆளும்
தனியுற்று வாளும் குறள்..

●

# இனியொரு விதிசெய்வோம்

எண்ணங்களை திண்ணமாக்கு
எதிரியையும் நண்பனாக்கு
உயரங்களை எம்பித்தொடு
உள்ளத்தின் அழுக்கை அறு
கண்ணீரின் துளிகளிலும்
கவிதை செய்வோம் – தோழா
இனியொரு இனியொரு
விதி செய்வோம்.!

○

தோற்றால்தான் தூரம் குறையும்,
மாற்றத்தினால் தான் நன்மை விளையும்,
நம்பிக்கை எனும் வில்லினை எடு,
முயற்சிகள் எனும் அம்புகள் தொடு,
வெற்றியின் ஊருக்கு
புதுவழி செய்வோம்! – தோழா
இனியொரு இனியொரு
விதி செய்வோம்!

○

மரபுகளை மாற்று – தோய்ந்த
மனதினை தேற்று,
தடை கற்களையே
படிக்கல்லாக்கு,
முடிவுகளை நீயே முடிவாக்கு,
தடைகள் பலதாண்டி
வெற்றி செய்வோம்! – தோழா
இனியொரு இனியொரு
விதி செய்வோம்.



ஏற்றத் தாழ்வுகளை
எட்டி உதைப்போம்,
வாட்டிடும் வறுமைக்கு
வறுமை ஊட்டுவோம்.
திறமைக்கு சரியான
மதிப்பு கொடுப்போம் – தோழா
இனியொரு இனியொரு
விதி செய்வோம்.

○

ஆயுதங்கள் அனைத்தையும்
அனலிட்டு கொளுத்துவோம்!
பூக்களால் ஆடைநெய்து
பூமியைப் போர்த்துவோம்,
அன்பெனும் நீரினை அகிலம்
முழுக்க பாய்ச்சுவோம்! – தோழா
இனியொரு இனியொரு
விதி செய்வோம்!.

●

●

ஒரு
விபச்சாரி,
நடிக்க ஆசைப்படுகிறாள்.
பாவம்,
அவளுக்கு தெரியாது
அதற்கு இதுவே
பரவா யில்லை என்று!.

●



## நட்பில் பிறந்த நாலு வார்த்தைகள்

நம் நட்பு,
தமிழ்நாட்டு பேருந்துகளின்
படிகட்டுகள் போல,
பலமானவை.
உள்ளே
பேசுவதற்கு எவ்வளவோ இருந்தாலும்
அடுத்த கணம்
பிரிவது போல்
தொங்கி கொண்டே இருப்போம்.
நம் நட்பு,
தமிழ்நாட்டு பேருந்துகளின்
படிகட்டுகள் போல,
பலமானவை..

●

உன் மௌனம்
எனக்கு
கத்துக் கொடுத்து விட்டது.
நமக்குள் இருப்பது
நட்பு மட்டுமே
என்று..



உன்
திருமணத்தின் போது,
கடைசி சொட்டுக்
கண்ணீர் சிந்தி,
அனுபபி வைக்க கூட
ஆசைப்படுகிறேன்..
வெறும் தோழனாகவே..!

●

நட்பில் பிழையில்லை
பேசு!

●



## காமம் அற்ற காதல்

பாவம்!
உதடுகளுக்கு வலிக்கப் போகிறது
கொஞ்சம்
இதயங்கள் பேசிக் கொள்ளட்டும்.
நட்பில் தான்
இந்த
வசதி இருக்கிறது.
காதலில்
உதடுகள் வலித்தால்,
உடல்கள் பேசிவிடும்.

○

நாம்
தொட்டு தொட்டு பேசுகிறோம்
நிறுத்த வேண்டாம்.
இல்லை யெனில்
காதல் நம்மை தொட்டு விடும்!.

○

கண்ணுக்கு எட்டா தூரத்தில்
பெண் நின்றாலும்
உள்ளூற காமம் சுரக்கும்.
நீ
என்னை இறுக அணைத்தாலும்
அது
எட்டிக் கூட பார்பதில்லை!.

○

ஆசிரியர் தொடங்கி
அம்மா வரை
அனைவரும்
சொல்லி விட்டார்கள்,
உனக்கும் எனக்கும்
உள்ள உறவு
காதலென்று.

○

உண்மைதான்!
தாய்க்கும் மகனுக்கும்
இடைப்பட்ட காதல்,
ஒரே பிரசவத்தில் பிறந்த
அண்ணனுக்கும், தங்கைக்கும்
இடைப்பட்ட காதல்.

○

மார்கழித் திங்களின்
வைகறை புதுமலரில்
உருளும் பனித்துளியின் தூய்மை
என்றும் நம் நட்பில்

○

உனக்கும், எனக்கும்
ஒரே நாளில்தான்
திருமணம் நடந்தது.
முதல்நாள் இரவில்
தொலைபேசி தொட்டேன்.
எனக்கும் தூக்கமில்லை என்றாய்.
உன் கணவனும்,
என் மனைவியும்
பாராட் டிற்குரியவர்கள்.
யாரென்று கேட்டுவிட்டு
தேனீர் கோப்பையோடு வந்தார்கள்.



கல்லூரி வந்து
நிறுத்தம் செய்யப்பட்ட நாளில்
ஒன்றாய் உண்டுவிட்டு
திரையரங்கம் செல்வோம்,
எத்தனை முறை
உன் தோளில் தூங்கியிருப்பேன்.

○

உன்
விரல்களின் ஸ்பரிசத்திற்காகவே
இறைவன் எனக்கு
கண்ணீர் சுரப்பிகள்
தந்திருக்கிறான்
என்று நினைக்கின்றேன்!.

○

என்னவளை அறிமுகப் படுத்தினேன்
உன்னை
தனியாய் அழைத்து
ஏதோ முனுமுனுத்தாள்
நீ
இல்லாத போது,
அவளிடம் கேட்டேன்
நீங்கள் இருவரும்
காதல் செய்கிறீர்களா என்றாள்.
காமம் அற்ற காதல் என்றேன்
நீயும்
அதேதான் சொன்னாயாம்
அவள் சொன்னாள்.

●

## தண்டனை

தவறுகளுக் கெல்லாம்நான் தண்டனை சொல்கிறேன்
மீண்டும் அழுத்தமாய் செய்யுங்கள்; அத்தவறை
நீங்கள் உணரும் படி.

●



## மஞ்சத்து நிலாக்கள்

காம வெறியர்கள் கட்டில் பசியாற
தன்னுடலை பந்தியிடும் – செந்
தளிர்மேனி சிற்பங்கள்! கட்டில் உலகின்
படுக்கை விரிப்புகள்!

யாம பொழுதல்ல நண்பகல் சூரிய
வாய்நகையில் கூட – சேர்ந்து
கிடக்கும் புணர்ச்சி மலர்கள்! பலவண்டு
தீண்டும் ஒருபூ!

வண்டுகள் துப்பிய வெள்ளை மதுவை
கருவறையில் தாங்கும் – இதழ்
அற்ற மலர்கள்! துடுப்பில் கரைதேடும்
கண்ணீர் படகுகள்!

கண்ணெரிச்சல் துப்புமிவர் கண்டாலே ஊரர்ாகள்
சாடையாய் பேசுவார்கள் – தெரிந்
தாலும் புரிந்தாலும் சின்னவாய் புன்சிரிப்பை
மட்டும் தெரிக்கும்.

அங்கங்கள் அங்கங்கே செந்நிறம் பூத்திருக்கும்
கண்ணங்கள் கண்ணியிருக்கும் – இறுகிப்
பிடித்தவர் யார்என் பெயரென்ன ஏதுமறியா
நாளொரு கண்ணாளன்.

தங்க நிறமேனி ஒட்டிய மெல்லிய
சேலை உதிரச் – சிவப்பு,
உதட்டுக்குச் செஞ்சாயம் தோளினில் ஊஞ்சலாடும்
கையல கைப்பை,

மயிற்காட்டில் மல்லிப்பூ எப்போதும் புன்னகைப்
பூசிய மென்வாய் – இது
கட்டில் மலர்களின் காமத்து ஈக்களின்
மேனி அடையாளம்

வயிறு கழுவுவார்கள் சேராத பண்டத்தை
தின்றாலே நம்மக்கள் – இம்
மலர்கள் மென்வயிறோ சேர்த்தணைத்து ஏற்பதால்
கழுவப் படுகிறது.

தேன்சுவைத்து ஓடிவிடும் ஈக்களுக்கு
இச்சைகள் தீர்ந்த – உடன்
எச்சிலை துப்பிவிட்டு காசினை விட்டெறிந்து
ஓடிவிடும் பூக்களோ

வான்நின்று வாய்நகைக்கும் பொன்நிறத்து மஞ்சள்
நிலவே உனக்கென் – சிரிப்பு
தெரியுமா வையத்து மஞ்சத்து பூநிலவு
மாதர்கள் பாடு.

●



## சகியாக சம்மதமா

மண்ணில் பிறந்த, முகில்நிறை வானத்து
வெண்ணிலவு பொன்மகளே! நீளந்தன் – கண்கள்
குடித்த, கவித்துளி பூமழையே! என்கண்
வெடித்து உயிர்பூத்த பூ!

○

தேன்சொரியும் பூமகளே! தேருக்குள் சிற்பமே!
சின்னவிழி செந்தளிர் பூஞ்செடியோ! – என்தன்
உயிர்மை எடுத்து; உதட்டால் வரைந்த,
மயிரிடை ஓவிய மகள்.

○

பாதச் சுவடேதும் இல்லாமல் பத்திரமாய்
மோதல் விழாவாகும் ஆழியோரம் – காதல்தீ
கொண்டுநம் பத்துவிரல் கள்பாட் டிசைக்கேதோ
உண்ட படியே நடக்க!

○

பூங்காப் புதருக்குள் நாம்புதைந்து, புல்லின்கூர்
மங்க புரளஎன் தன்வாய்உள் – தேங்கிய
வார்த்தையை நானுதிர்க்க; அர்த்தமில்லா நீசிரிக்க;
பார்த்திதை பலர்மனம் ஏங்க

○

மழைத்தூர நேர்ந்தால் மாராப்பால் நீதடுக்க;
பாழ்நிலத்துக் கள்ளிமுள்ளாய் பெண்ணுனது தாழ்மணத்து
பூமார்பு தட்டுபோல் என்கண்ணின் உள்பரவ;
காமவெட் கத்தில் சிவக்க.

○

மெல்லிதழ் முத்தம்நான் கேட்க; முறைத்தேநீ
சில்முத்தம் பூப்பதிக்க; என்னவளே! – செல்லமாய்
முத்தம் அடிக்கடி நான்கேட்க; நீயறைய
சத்தம் பெரிதில்லா இச்.

○

தினந்தோறும் கோவிலுக்கு நாம்செல்ல; ஏதோ
முனுமுனுத்து நானும் வரநீயோ – மோனத்தில்
ஆழ்ந்திருக்க; கோவில் மணியோசை ஒத்திசைக்க;
பாழாகும் என்மனம்ஈ தால்.

○

எனையறிந்த பெண்களிடம் ஏதோ உரைத்து,
முனைச்சிரிப்பு நான்சிரிக்க; பார்த்து – பனைமர
உச்சிக்கு மார்பேற; பார்வை எனைநோக்க
பிச்சி எரிய எனை.

●



## ஏ தொலைந்து போனவளே

சொல்லில் அடங்காத
என் காதலை
சொல்லும் முன்னே,
சொல்லாமல்
தொலைந்து போனவளே!

○

நீ
இல்லாததால் என்னுலகம்,
நீ இருக்கும் போது
எனக்குத் தந்த
உன்
இதயம் போலவே
சுருங்கி விட்டது.
அதை
விரிவு செய்ய முடியாது
என்ற
விரக்தியிலேயே
வெளியேறி விட்டாயோ!

○

என்
காதல் என்ற புத்தகம்
மறுபதிப்பு செய்யாமலேயே
கிழிந்து விடுமோ!

○

இடிந்து போன
என்னித மண்டபம்
நீ
எங்கிருக்கிறாய் என்றறிந்தால்
ஒரு நொடியில்
உயிர் பெறும்!.

○

உன்
ஊரைக் கடக்கும் போதெல்லாம்
உன் நினைவுகளை
பின்னிருக்கையில்
அமர்த்திக் கொண்டு,
மெதுவாய் மிதிக்கப் படுகிறது
என் சைக்கிள்!.

○

நீ
இங்கு இல்லையே தவிர
எங்கோ இருக்கிறாய்
என்பது மட்டும் திண்ணம்.

○

உன் மூச்சுக் காற்றின்
வெப்பத்தில் தான்
என் உயிர் இன்னும்
உறையாமல் இருக்கிறது!.

○

உன் கூந்தல் ஈரத்தில்தான்
மனச்சருகு இன்னும்
கருகாமல் இருக்கிறது.

○



ஏ தொலைந்து போனவளே!
நீ
இல்லாததால் என்னுலகம்
நீ இருக்கும் போது
எனக்கு தந்த
உன்
இதயம் போலவே
சுருங்கி விட்டது
அதை
விரிவு செய்ய முடியாது – என்ற
விரக்தியிலேயே
வெளியேறி விட்டாயோ?..

●

## காதல் திருவிழா

(என்னை பிரிந்து இளைத்து போனவளுக்காக)
காற்றில்
உன் பெயரைச் சொல்லி சொல்லி
களைத்துப் பேனேன்
நீயும்
இளைத்துப் போனாயாம்!
நம்மால் தான்
காதல்
பிழைத்துக் கொண்டிருக்கிறது.

என்னிடம்
வார்த்தைகள் இல்லாத போது,
நீ சிந்தி
நான் சேமித்த
உன் சிணுங்கல்களை
எண்ணத்தில் நிறுத்தி
ஏட்டில் குவிக்கின்றேன்.
அத்தனையும் விரிகிறது
அழகிய கவிதையாய்!
இன்று பிரிவில்.
என்றேனும் சந்தித்தால் – அன்று
கண்ணில் மழையோடு கொண்டாடுவோம்
காதல் திருவிழா..!

●



## அழகான அவஸ்தை

என் இதயத்தில்
பூத்த,
இருவிதழ் சிவந்த மல்லி
நீ தான்!

○

ஒரு நாள்
வானின் விழுதுகள்
பூமியைத் தொட்டுக் கொண்டிருந்தது.
நீ,
உன்வீட்டிற்கு போகும்முன்
என்வீட்டில் ஒதுங்கினாய்;
என் வறண்ட இதயத்தில்
அப்போது தான் – உன்
பார்வை மழையும்,
காதல் விதையும்
தூவப்பட்டது.

○

காதல் மாய வலிதான்
காயங்களே இல்லை
ஆனால்,
அதிகமாய் வலிக்கிறது!.
வலியிலும் ஒரு வாசனை.

○

நீ எங்குப் பார்த்தாலும்
என்னைப் பார்ப்பது போலவே இருக்கிறது!.
அந்த நிமிடங்களில்,
என் உயிர்
அனல் பக்கத்தில் வைக்கப்பட்ட
பனிக்கட்டி போல
உருகி ஓடும்.
அதை ஒன்றாய்ச் சேர்த்து
உருவம் கொடுக்க
எத்தனை இரவுகள்
விழிக்க வேண்டியிருக்கிறது
தெரியுமா உனக்கு, அதுசரி
கரையைப் பற்றி
அலைகளுக் கென்ன கவலை.
ஆனாலும், அன்பே
காதல்
அழகான அவஸ்தை உண்மைதான்.

●



## ஊமை உணர்ச்சிகள்

கவர்ச்சியாய் சுவரொட்டி கருவிழியில் தினம்முட்ட,
தவறென்று கண்ணுணர்ந்து வியர்வையாய் நீர்ச்சொட்ட
மீளாத பார்வைகளோ மிச்சமின்றி சுவைத்துவிடும்.
வாளாத நினைவுகளோ வாட்டிஎனை வதைத்துவிடும்.
ஆபாசக் கனவுகளில் அன்றாடும் என்தூக்கம்,
தூங்காது விழிசிவந்தும் தீராது என்னேக்கம்,
கண்சிவந்தும் அச்சிவப்பில் என்கனவு எரியாது
பெண்பற்றி அந்நாளில் நன்நினைவு விரியாது
தூக்கமென் விழிவிட்டு தூரப்போகும் இரவுகளில்
பூக்களன்ன பெண்களிடம் புதுவார்த்தை ஒத்திகையில்
ஒத்திகை உண்மையாய் ஒருநாளும் நடந்ததில்லை
யுத்திபல கையாண்டும் யுவனெனக்கு வாய்ப்பில்லை
பசித்தஎன் இளமைக்கு பயனில்லாச் சொப்பணமும்
புசிக்கத்தேன் நிலவுப்பூ முகப்பெண் சமைக்கும்
வாடாத பூமுகத்தை வாட்டுமிந்த பாலுணர்ச்சி
ஏடாக எழுதியதை எரித்திடும் தீக்காட்சி
பதினேழின் பருவமது பதம்பார்க்கம் பூவுணர்ச்சி
இதிலென்ன தவறுண்டு ஈதிளமை புதுமலர்ச்சி
ஆமையாய் இருந்தால் ஏதடா புணர்ச்சி
ஊமையின் உணர்வல்ல ஈதூமை உணர்ச்சி.

●

## காதல்

உள்ளுக்குள் தேன்வார்க்கும் உருவமற்ற ஒருகவிதை
பள்ளத்து புதுமலராய் பருவத்தில் நிறைந்திருக்கும்
இளமை காலத்து இனிக்கும் நரகம்!
வளமை வார்க்கும் வயதின் பயிர்!
கண்களில் பூக்கும் கவிதை மலர்!
எண்ணத்தில் சிறகடிக்கும் எலும்பில்லாப் பறவை!
இன்பத்தின் கடல்! இளமையின் வரம்!
துன்பத்தை தூளாக்கும் துளையிட்ட கழையிசை
உயிரின் முதல்வலி மார்கழி மென்பனி
மயிரிலும் பூப்பூக்கும் மந்திரமோ காதல்
மண்ணாங் கட்டி சுண்ணாம்புச் சட்டி
என்னநான் சொல்ல இல்லாத காதலை
காதல் காதல் காதலாம் இல்லையேல்
சாதல் சாதல் சாதலாம் பாரதி
இன்றைய காதலுக்கு இல்லாததே நன்று,
இருந்திருந்தால் நீயே இறந்திருப்பாய் தானே.
முப்பாலுக்கு அரசா! மூத்தோர்க்கு மூத்தா!
தப்பாய் சொன்னாய் தரங்கெட்ட காதலை
மலரினும் மெல்லியதா மானங்கெட்ட காதல்.
சிலரிதனை சிரித்தே கசக்கி சீரழித்தார்.
அம்மணமாய் பார்த்தால், அழும்போது துடைத்தால்,
சும்மாவே இருந்தால், சுத்தமாய் சிரித்தால்
நான்குபேரை அடித்தால், நல்லவனாக நடித்தால்
வன்னுடம்பு பிருந்தால், வறுமை தெரிந்தால்,
பொறுமை மிகுதி, போராடத் துணிவு,
திறமை கொஞ்சம் தீப்பொறியாய் வெளிப்பட்டால்.
இப்படித்தான் திரையில் இல்லாத காதலை
தப்பாய்ச் சொல்லி தரந்தாழ்த்தி விட்டனர்.



பன்னிரண்டு வயது பருவத்தே மாற்றத்தை
புனிதமான காதலென்று புலம்புகிறார் பலரிங்கே
வேடிக்கை தானம்மா விளம்புதலை கேட்கையிலே
வாய்முடிச் சிரிக்கின்றேன் வம்பேதும் வருமென்றால்
ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொன்று அழகு
அகவுகின்ற மயிலினத்தில் ஆணுக்கே தோகை
பிளிறுகின்ற யானையிலே பெண்ணுகில் தந்தம்
தளிறுகளே மானுடத்தில் பெண்மைக்கே மென்மை
அழகின் கவர்ச்சியில் ஆணினம் மயங்குகிறது.
இலகுவாய் கிடைப்பதால் இதுகாதல் என்கிறது
கல்லூரிப் பாடத்தில் கட்டாயமா காதல்
கல்விக்கு காசு காதலுக்கு தேகம்
ஆகிப்பேச் சிப்படி ஐய்யய்யோ பாவம்
சகிக்க முடியவில்லை சத்தியமாய் சொல்கிறேன்
இயல்பாய் பேசியவன் இன்று காணோம்
புயலால் ஆலமரம் புழுதியெழ சாய்ந்ததுபோல்
சொல்லாது சாய்ந்தான் இல்லாத காதலால்
கல்லாத மாந்தரே காதல்வேலை அழிப்பதா
இன்றைய காதல்கள் இதழில் முடிவதில்லை
இன்பத்தில் தொடர்கிறது இன்னுமிதை என்னசொல்ல
கறுப்புக் கன்னிகள் காதலின் எதிரிகள்
விருப்பம் கொள்ள விளைவோர் யாருமில்லை
உதட்டோடு முத்தத்தை உறுஞ்சியே சாலையில்
இதைக்கேட்டால் காதலர்கள் இப்படித்தான் என்கிறார்கள்
பள்ளியில் பூக்கும் பருவத்தே உணர்ச்சியை
சொல்லித் தீராது சொல்லவும் நேரமேது,
நன்றாய் படித்தால் நன்றாய் வளரும்,
ஊன்றி கவனித்தால் உண்மையல்ல இதுவும்.
உணர்ச்சியின் பிளம்பாய் ஊற்றெடுக்கும் அடுத்து

புணர்ச்சியின் உணர்ச்சியாய் பூக்கும் கல்லூரியில்,
ஆடைகளில் அவிலும் அழகில் மயங்கும்,
வாடையில் பூமரமாய் வதைக்கும் பிரிவு.
அனுபவ காதலென்று அடுத்தொன்று பூக்கும்
அனுபவித்தால் தெரியும் அதுவும் இல்லையென்று.
பெண்மையே மயங்காதே பேதமை பேச்சுகளில்.
ஆண்மையே மயங்காதே அழகெல்லாம் காதலென்று.
உண்மையிது என்று உரைக்கவில்லை நானும்
சொன்னதெல்லாம் உண்மைதான் சொல்லுங்கள் நீங்களே..

●



●

சில காயங்களுக்கு
வலியில்லை,
ஏன்?
வழியுமில்லை
காதல் கூட
இந்த வகைதான்!

●

●

மறக்கச் சொல்லி விட்டு
போகும்
அவளை,
கொஞ்ச நேரம்
இருக்க சொல்லுங்கள்.
இருக்க மாட்டாள்
பரவாயில்லை
நீங்களே சொல்லி விடுங்கள்
நான்
இறந்து விட்டேன் என்று..!

●



●

திடீரென்றெல்லாம்
வந்து பேசாதே!
பத்து கோடி ரூபாய்
விழுந்தால்
என்ன செய்வான்
பாவம்
பரம ஏழை!

●

●

நான்
எழுத நினைக்கும் போதெல்லாம்
என் பேனாவில்
மை தீர்ந்து விடுகிறது!.
பேச நினைக்கும் போதும் கூட
இப்படித்தான்!.

●



●

காலை நேர
அரசு பேருந்து போல
கூட்டம்!
அவளின் இதயத்தில் இடம் பிடிக்க
ஆனால்,
அவள் உள்ளமோ
மதியநேர
அரசு பேருந்து போல,
காலியாகவே இருந்தது..!

●

●

அடுத்தடுத்த
வார்த்தைகளுக்கிடையே உள்ள
இடைவெளியில்
சிக்கிக் கொண்டிருக்கிறது
நம் காதல்.

●



●

அன்று
அவளின் காயங்களுக்கு
என்
ஒரிரு வார்த்தைகள்
ஒத்தடம் தருவது போல்
இருந்தது.
இன்று
பலபேர் அவளை
சொறிந்து கொண்டிருக்கிறார்கள்
அவளும் அதை
விட்டு விட்டாள்
அது
இதமாய் இருக்கிறது.
என்பதால்..

●

●

அவள்
நட்சத் திரங்களில்
வாழ்கிறாள்.
கல்லறையின் மீது
கண் சிமிட்டிக் கொண்டு
நான்..

●



## பிரிவு துணுக்குகள்

இன்று
குஞ்சுகள்,
அதன் தாயிடமிருந்து
பிரிக்கப் படுகிறது.

●

●

முடிவுகளைப் பற்றி
கவலைப் படாதே!
முடியும்
என்ற வரை
முயற்சி செய்.
உனது முயற்சி
முடிவையும்
முறியடித்து விடலாம்..!

●



●

எனக்கு,
கண்ணீர் சுரப்பிகள்
இல்லையென்று
பீற்றிக் கொண்டிருந்தவர்களின்
வேசம்
கலையப் போகிறது.!

●

●

இனி, எப்படி
பயிற்சி கொடுக்கப் போகிறேனோ !
என்
நாவிற்கும்,
மனதிற்கும்
உன்பெயரை மறக்கச்சொல்லி !..

●



●

இன்று
எல்லோரும்,
தோற்று விட்டோம்
காலத்திடம் !..

●

## மரியா ஷெரபோவிற்கு காதல் கடிதம்

ஒக் உடம்பு காரிக்கு –
மட்டை பிடிக்கும் – உன்
கையைப் பிடிக்க
ஷெரபோவா ராஜ்ஜியத்தின்
கடைநிலை ஊழியன் எழுதும்
காதல் கடிதம்,

○

கம்யூனிஸ்ட் தேசம்
கண்டெடுத்த
ஆறடி அதிசிய சிலையே!

○

வட்டப் பந்தை அடிக்கும்
நெட்டைப் பந்தே!

○

உன் உயரத்தில்
ஒடிந்துபோன
ஓராயிரம் கோடி பேர்களில்
நானும் ஒருவன்!

○

இந்திய தேசத்து
மல்லிகை கொடியின் மறுபதிப்போ
உன்னிடை!

○

இடையை போலவே இதழும்
இருக்கிறதா? இல்லையா?
வண்ண வேறுபாடு
செர்ரி பழத்தை பிளந்து
பாலில் போட்டும்
போடாமலும்

○



நீ
பந்தை அடிக்கும்போது எழும்பும்
சத்தத்திலேயே
எதிரியின் தோல்வி
எழுதப்பட்டு விடுகிறது

○

தோற்று போகாமல்
என்ன செய்வாள்
ஒரு பந்துதானே ஆட்டத்தில்!
மூன்று பந்திருந்தால்
பாவம் எதிரி
என்னைப் போலவே
குழம்பியிருப்பாள்!

○

நீ அடித்து
எல்லைக் கோட்டை
தாண்டி விழுந்த பந்திற்காக
உன்
தீவிர ரசிகனை விட
உன்னை விட, – ஏன்?
உன் பயிற்சியாளனை விட,
அதிகம் வருத்தப்பட்டு
தொலைகாட்சியை
தொட்டு தொட்டு அழுதவன் நான்!.

○

உன் உயரத்திற்கு
என்னுடல்
நீள வேண்டும் என்று,
தொங்கி தொங்கி உடைந்த
கிளைகளை, சேர்த்திருத்தால்,
உனக்காக அழகான
மரவீடு ஒன்று சமைத்திருக்கலாம்.

○

உன் கால்களில் நீளமே
என் உயிரின் ஆழம்

○

உன் மூக்கின் நீளத்தை
கடக்க முடியாமல்
என் மூச்சு
பல நேரங்களில்
திணறி திரும்பியிருக்கிறது

○

என்ன சம்பாதித்து
என்ன புண்ணியம்
எங்களூர் விவசாயிகளின்
வயிறைப் போலவே உன்வயிறும்
ஒட்டியே கிடக்கிறது!

○



நீ
ஆடுகளத்தில் ஆடுவதை – என்
இதய குளத்து தவளைகள்
எட்டி எட்டிப் பார்க்கின்றன.
குளத்தில்
கால்நனைக்க வேண்டாம்,
கரைகூட வரவேண்டாம்,
நீ அடிக்கும் பந்தில்
ஒன்றை அனுப்பு
காதல் தவளைகள்
கதிமோட்சம் பெறும்.

○

நானும் உன்னை
காதலிக்கிறேன் – நீ
என்னை மட்டும் காதல் செய்!

○

உலகமே வியக்கும்
உயர்ந்த இடத்தில்
நீ ஆடிக்கொண்டிருக்கிறாய்!
நானோ,
உனக்கான பாடலை
எனக்கே கேட்காதவாறு
பாடிக் கொண்டிருக்கிறேன்.

○

'நல்ல தெல்லாம் குழந்தைக்கே'
என்றான். உங்கள் தேசத்து
தலைவன்.
நல்லவளே நான்
குழந்தையாக தயார்!

○

நீயோ1
அழகு தேசத்தின்
முதல்நிலை கோடீஸ்வரி!
நானோ,
காதல் தேசத்தின்
கடைநிலை ஏழை..!

○

என் காதலை
ஏற்கா விட்டாலும்!
வெறுத்து விடாதே!

○

உயிர் கொண்ட ஓவியமே
உனக்கோர் வேண்டுகோள்
விளம்பர படங்களில் நடிக்காதே,
விளம்பர பொருளை விட
உன்னையே அழகாய் காட்டுகிறார்கள்

○

காதலும் கண்ணீரும் கலந்து
உயிரென்னும் தூரிகை கொண்டு
தொட்டு தொட்டு எழுதிய
இந்த கடிதத்தை – உன்
சுட்டுவிரல் தொட்டாலே போதும்
என் காதல்
சுடர்விட்டொளிரும்

○



அன்பே!
நான் அனுப்பும் இந்த கடிதத்தை
பறக்க விட்டால் – அது
இன்னொரு வானத்தையே உருவாக்கும்
துண்டு துண்டாய்
கிழித்தெறிந்தால்
மேகங்களாய் மாறி – உன்
மேனி தீண்டும்
என் காதலை நீ
நிராகரிக்கவே முடியாது
ஏனெனில் – இது
நிஜம்..

●

இப்படிக்கு,
உன்னால் பித்தனான
ஓராயிரம் கோடி பேர்களில்
ஒருவன்.

# நன்றி

எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவிய யார் வேண்டுமானாலும் தங்களின் பெயரை இட்டு நிரப்பிக் கொள்ளலாம். ஒரு சிலரை தவிர. ஏனெனில், அவர்களுக்கு நன்றி சொல்லி அன்னியப்படுத்தி விட என் மனம் அனுமதிக்கவில்லை.